DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 63/2022

Sessions : DW 2

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | குமார் |
| Father / Husband Name | சந்திரன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 04.11.2025

**குறுக்கு விசாரணை:**

1. நான் மதுராந்தகத்தில் கடந்த 5 வருடங்களாக ஜூஸ் கடை வைத்துள்ளேன். புகார்தாரரை எனக்கு எப்படி தெரியும் என்றால் அவர் என் அண்ணனின் நண்பர் அதன்பிறகு எனக்கும் நண்பர். நான் ஜூஸ் கடைக்கு பழம் வாங்குவதற்கு புகார்தாரரை கார் டிரைவராக அழைத்துச்சென்றேன் என்றால் சரியல்ல, நண்பர் என்ற முறையில் அழைத்துச்சென்றேன். நான் கடந்த 10.11.2021 ம் தேதி என்னுடைய கடையை புணரமைப்பு செய்யவேண்டும் என்று புகார்தாரரிடம் ரூ.5 லட்சம் கடன் கேட்டேன் என்றால் சரியல்ல. அந்த தொகையை திரும்ப செலுத்துவதற்காக காசோலை எண்.147292 கொடுத்தேன் என்றால் சரியல்ல. புகார்தாரர் கொடுத்த பணத்தை பலமுறை திருப்பி தரச்சொல்லி கேட்டும் நான் திருப்பி தரவில்லை என்றால் சரியல்ல. 10.12.2021 அன்று புகார்தாரரிடம் அவருக்கு தரவேண்டிய பணம் வங்கி கணக்கில் உள்ளதாக கூறி காசோலையை செலுத்தி பணத்தை பெற்றுக்கொள்ளும்படி கூறினேன் என்றால் சரியல்ல. நான் சொன்னதை நம்பி புகார்தாரர் காசோலையை செலுத்தியபோது என்னுடைய வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என திரும்பி வந்துவிட்டது என்றால் சரியல்ல.

2. அதை புகார்தாரர் என்னிடம் தெரிவித்தபோது வழக்கு போட வேண்டாம் பணத்தை திருப்பி செலுத்திவிடுகிறேன் என்று நான் கேட்டுக்கொண்டேன் என்றால் சரியல்ல. மீண்டும் 28.01.2022 ம் ஆண்டு வங்கியில் பணம் இருப்பதாக கூறி காசோலையை கலெக்ஷனுக்கு போடசொன்னேன் என்றால் சரியல்ல. காசோலை மீண்டும்போதிய பணம் இல்லாத காரணத்தால் திருப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வழக்கு காசோலையில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார்தாரர் எனக்கு 04.04.2022 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தார் என்றால் சரிதான். அந்த அறிவிப்பை நான் தான் பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். புகார்தாரர் என்னுடைய காசோலையை எடுத்துக்கொண்டது சம்மந்தமாக நான் காவல்நிலையத்தில் புகார் ஏதும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை, அவர் என்னுடைய காசோலைகள் 4–ஐ திரும்ப கொடுத்துவிட்டார், ஒன்றை மட்டும் எடுத்துக்கொண்டார்.

3. என்னுடைய முதல் விசாரணை சங்கதிகளை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். நான் புகார்தாரரிடம் வாங்கிய கடனை திரும்ப செலுத்தக்கூடாது என்ற எண்ணத்தால் தான் அவரை ஏமாற்றி வருகிறேன் என்றால் சரியல்ல. நான் மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் பிரிவு 138ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றத்தைபுறிந்துள்ளேன் என்றால் சரியல்ல.